மாதிரி முதல் திருப்புதல் தேர்வு **2021 - 2022**

வகுப்பு: **10** மதிப்பெண்கள்: **100**
பாடம்: தமிழ் நேரம்: **3** மணி

பகுதி **1**

சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக. **15 × 1= 15**

1.எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
விடை:
இ) எம் + தமிழ் + நா

2.“உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்”
– பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
விடை: ஆ) மோனை, எதுகை”

3. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள்.
இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
விடை: ஈ) சருகும் சண்டும்

4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
விடை:
ஆ) மணி வகை

5. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழனை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர் ___________
அ) பாவணார் ஆ) பாரதிதாசன்
இ) இரா இளங்குமரனார் ஈ) தமிழழகனார்
விடை: இ) இளங்குமரனார்

6. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்
அ) கனகசுப்புரத்தினம் ஆ) துரை மாணிக்கம் இ) பாவலர் ஈ) முத்தையா

7. <u>முறுக்கு மீசை சிரித்தார்</u> அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை
அ) பண்புத் தொகை ஆ) அன்மொழித் தொகை இ) உவமைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை
விடை: ஆ) அன்மொழித் தொகை

8. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது.................................
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
விடை:

அ) வேற்றுமை உருபு
9. வளவன் வீட்டிற்கு சென்றான் இத்தொடர் எவ்வகை மொழி
அ) பொது மொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) பயிற்சி மொழி
விடை: இ) தொடர் மொழி
10. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மொழி மாநாடு நடத்திய முதல் நாடு
அ) ரஷ்யா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) மலேசியா
11. கெடுப்பதூஉம் எடுப்பதூஉம் இச்சொற்களில் பயின்று வந்துள்ள அளபெடை வகை
அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

பாடலைப் படித்து பின்னர் வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.
செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறாய் புகழுரையும்
12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) கனிச்சாறு ஆ) காற்றே வா இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்
13. இப்பாடல் ஆசிரியர் யார் ?
அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) பெருஞ்சித்திரனார் ஈ) கண்ணதாசன்
14. செந்தமிழே - இலக்கண குறிப்பு தருக.
அ) எண்ணும்மை ஆ) பண்புத் தொகை இ) வினைத்தொகை ஈ) வினைமுற்று
15. இப்பாடலில் அமைந்துள்ள எதுகை சொற்களை எடுத்து எழுதுக.

பகுதி **2** (மதிப்பெண் **18**)

பிரிவு **1**

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். **4 × 2 = 8**

16. விடைக்கேற்ற வினாக்களை அமைக்கவும்.
அ) ஒரு நாட்டின் வளத்திற்கு தக்கபடியே, அந்த நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.
விடை: ஒரு நாட்டின் எதற்கு ஏற்ப அந்நாட்டின் மக்களின் அறிவு ஒழுக்கம் அமைந்திருக்கும்?
ஆ) கரும்பின் நுனிப்பகுதியை கொடுத்தார் என்று அழைப்பர்.
விடை: கரும்பின் எப்பகுதியை கொடுத்தார் என்று அழைப்பர்?

17. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
விடை:
சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
இவையாவும் எஞ்சிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

18. வசன கவிதை – குறிப்பு வரைக.
விடை:
உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும்.
கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.
ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்.
தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

19. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?
விடை:
தாள், தண்டு , கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி.

20. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

| **சரியான தொடர்கள்:** | **பிழையானத் தொடர்:** |
|---|---|
| ♦ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.<br>♦ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. | ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.<br>**பிழைக்கான காரணம்:**<br>தாறு – வாழைக்குலை;<br>சீப்பு – வாழைத் தாற்றின் பகுதி |

21. விடல் என முடியும் குறளை எழுதுக.
பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**பிரிவு 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்கவும். 5 × 2 = 10**

22. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) தொடு – தோடு : காதைத் தொடும்போது தோடு அழகாக ஆடியது.
ஆ) டயட்மலை – மாலை : மலை மீது ஏறி மாலையில் விளையாடினேன்.

23.வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

24.கலைச்சொல் அறிவோம்
அ) Classical literature - செவ்விலக்கியம். ஆ) Homograph – ஒப்பெழுத்து
25. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக.
அ) பழம் – குலை (பழக்குலை)
ஆ) ஆடு – மந்தை (ஆட்டுமந்தை)

26. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக.
தொடரில் அமைக்க.
விடை:
தண்ணீர் குடி.
தண்ணீரைக் குடி (இரண்டாம் வேற்றுமைத் தொகை)
மிகுந்த தாகத்தினால் தண்ணீரைக் குடித்தேன்.

தயிர்க்குடம்.
தயிரை உடைய குடம். (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
கமலா தயிர்க்குடத்திலிருந்து தயிரை ஊற்றினாள்.

27. பழமொழிகளை நிறைவு செய்க.
உப்பில்லாப் …………………………..
உப்பிட்டவரை ………………………….
விடை :
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

28. எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.
அ) எறும்புந்தன் கையால் எண் சாண் 8 அ
ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி 4 2 சு உ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 × 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
விடை:
பிள்ளை – தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன் .
வடலி – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.
நாற்று – நெல் நாற்று நட்டேன்.
கன்று – வாழைக்கன்று நட்டேன்.

பைங்கூழ் – சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

30. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் பெயர்கள் யாவை?
விடை:
சூம்பல் – நுனியில் சுருங்கிய காய்
சிவியல் – சுருங்கிய பழம்
சொத்தை – புழுபூச்சி அரித்த காய் (அ) கனி
வெம்பல் – சூட்டினால் பழுத்த பிஞ்சு
அளியல் – குளுகுளுத்த பழம்
அழுகல் – குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய்
சொண்டு – பதறாய்ப் போன மிளகாய்
கோடான்காய் (அ) கூகைக்காய் – கோட்டான் அமர்ந்ததினால் கெட்ட காய்
தேரைக்காய் – தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
அல்லிக்காய் – தேரை அமாந்ததினால் கெட்ட தேங்காய்
ஒல்லிக்காய் – தென்னையில் கெட்ட காய்

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா", "சிந்துக்குத் தந்தை" என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர். சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும்; பெண்ணடிமைத் தன்மையையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர். குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புதல்வன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்; இவருடைய கவிதைத் தொகுப்பில் உள்ள காற்று என்னும் தலைப்பிலான வசன கவிதையின் ஒரு பகுதியே பாட பகுதியாக இடம்பெற்றுள்ளது.

1. பாரதியார் எந்தெந்த இதழ்களின் ஆசிரியராக பணியாற்றுகிறார்?
   இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
2. குழந்தைகளுக்கான நீதிகளை எழுதிய நூல்களின் பெயர் என்ன?
   கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி
3. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டுப் பெற்றார்?
   "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா", "சிந்துக்குத் தந்தை" என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்.

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். **2 × 3 = 6**

**(34 கட்டாய வினா)**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!

பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகானமணிமேகலையே!
கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

33. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
விடை:
மின் விசிறிக் காற்று : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா.
சோலைக்காற்று : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப் பட்டாலும் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.
மின் விசிறிக் காற்று : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?
சோலைக்காற்று : ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.
மின் விசிறிக் காற்று : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன்.
சோலைக்காற்று : அப்படியா! அப்புது மொழி யாது?
மின் விசிறிக் காற்று : “காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்”.

34. மனப்பாட பாடலை அடிபிறழாமல் எழுதுக.

அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே'
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடை அளிக்கவும். **2 × 3 = 6**

35. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

அணி இலக்கணம் :
உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.
உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.
உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.
உவம உருபு : போல (வெளிப்படை)
விளக்கம் : ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது ஆகும்.

36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். இக் குறளுக்கு அலகிட்டு வாய்ப்பாடு தருக.

| சீர் | அசை | வாய்ப்பாட்டு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர் நேர் | தேமா |
| தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறள் மலர் என்னும் வாய்ப்பாடு பெற்று முடிவடைகிறது.

37.அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது’
இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

| தொழிற்பெயர் | எதிர்மறைத் தொழிற்பெயர் |
|---|---|
| அறிதல் | அறியாமை |
| புரிதல் | புரியாமை |
| தெரிதல் | தெரியாமை |
| பிறத்தல் | பிறவாமை |

அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். **5 × 5 = 25**

38. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

அறிமுக உரை:

தாயே! தமிழே! வணக்கம்.

தாய் பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்.

என்று தமிழ்த்தாயை வணங்கி, இங்கு மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் பாடலையும் ஒப்பிட்டுக் காண்போம்.

| சுந்தரனார் | பெருஞ்சித்திரனார் |
|---|---|
| நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பெண்ணாக பூமியையும்,<br>பாரதத்தை முகமாகவும், பிறை போன்ற நெற்றியாகவும்,<br>நெற்றியில் இட்ட பொட்டாக தமிழும்,<br>தமிழின் மணம் எத்திசையும் வீசுமாறு உருவகப்படுத்திப் பாடியுள்ளார் சுந்தரனார். | குமரிக்கண்டத்தில் நின்று நிலைபெற்ற மண்ணுலகம் போற்ற வாழ்ந்த பேரரசியே!<br>பழமைக்கும் பழமையானவளே!<br>பாண்டியனின் மகளே! திருக்குறளின் புகழே!<br>பாட்டும் தொகையே! கீழ்க்கணக்கே! சிலம்பே! மேகலையே! என்று பெருஞ்சித்திரனார் தமிழை முடிதாழ வணங்கி வாழ்த்துகிறார். |
| "நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்....." | "அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!" |

நிறைவுரை:

இருவருமே தமிழின் பெருமையைத் தம் பாடல்களில் பூட்டி, காலந்தோறும் பேசும்படியாக அழகுற அமைத்துப் பாடியுள்ளனர்.

39.மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

அஅஅஅ,
12-01-2022

அன்புள்ள நண்பன் அரசுக்கு,
உன் உயிர் நண்பன் எழுதுவது. நலம் நலமறிய ஆவல்,
நேற்றைய நாளிதழில் ‘மரம் இயற்கையின் வரம்’ என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு முதல் பரிசு பெற்றதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நாளிதழிலும் அக்கட்டுரை வெளிவந்திருந்தது. அதனைப் படித்துப் பார்த்தோம்.

**மரம்தான் மரம்தான்**
**மனிதன் மறந்தான் மரத்தை**

என்று நீ எழுதிய சொற்கள் விழிப்படையச் செய்துவிட்டது. நாங்களும் எங்கள் பகுதியில் மரங்களை நட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டோம்.நீயும் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு உலகளாவிய சாதனைகளைப் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைத் தேடித்தர மனதார உன்னை வாழ்த்துகிறேன்.

Padasalai.Org

இப்படிக்கு,
உன் உயிர் நண்பன்,
க. தமிழ்ம ணி

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



ஏ! மானிடா......... ஏ! மானிடா
என்னை (மரத்தை) அழித்தாய்
எனக்கும் ஒரு காலம் வரும்
பள்ளிக்குழந்தைகள்
புத்தகப்பை சுமப்பது போல
உயிர்வளிக்காக
என்னையும் நீ சுமப்பாய்.......
உயிர்வாழ்வதற்கு.

அல்லது

வானொலி அறிவிப்பு
ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.
விடை:
புயலின் போது வெளியே செல்ல மாட்டோம்.
தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.
மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே குடும்பத்தினரோடு தங்குவேன்.
காற்றடிப்பது நின்றாலும் வானொலி அறிவிப்பைக் கேட்டு அதற்கேற்ப செயல்படுவோம்.

41. நூலக உறுப்பினர் சேர்க்கை கூறிய படிவத்தை நிரப்புக.

நூலக உறுப்பினர் படிவம்

மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம்   அஅஅஅ மைய நூலகம்

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் 101 உறுப்பினர் எண் - 1001

1 பெயர் : அ.தமிழரசன்
2 தந்தை / கணவர் பெயர் - அன்பரசன் வி.
3. பிறந்த தேதி - 11 - 10 - 2006
4. வயது - 15
5. படிப்பு : பத்தாம் வகுப்பு
6. தொலைபேசி எண் : 97979 97979
7. முகவரி : எண் 11 , பாரதி நகர் ,
கருப்பாயூரணி , அஅஅ - 20

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் அஅஅ மைய 'நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 600 - சந்தா தொகை 60 ஆக மொத்தம் ரூ. 660 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : அஅஅ தங்கள் உண்மையுள்ள,
நாள் : 12 - 01 - 2022 அ.தமிழரசன்

திரு / திருமதி / செல்வி / செல்வன். அ.தமிழரசன். அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
அலுவலக முத்திரை
(பதவி மற்றும் அலுவலகம்)

42. தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.
The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower’s

fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.
இயற்கை

பொன்னான கதிரவன் நாள்தோறும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி, இருளை மறையச் செய்யும், பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையைத் தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து
இடங்களிலும் பரவி ஒரு புத்துணர்வான சூழ்நிலையை உருவாக்கும்.

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 × 8 = 24**

43.நயம் பாராட்டுக.
திரண்ட கருத்து:

‘வாழைக்கு அழகு குருத்து
செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து’

“தேனினும் இனிமையான செம்மை பெற்ற மொழி தமிழ் மொழி. தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி தமிழ்மொழி. ஒளி வீசி அறிவும், செறிவும் நுட்பமும் கொண்ட மொழி தமிழ்மொழி உணர்வோடு உணர்வான மொழி, வானினும் உயர்ந்த வளம்மிக்க மொழி தமிழ். தழைத்து ஓங்குவாய் குளிர்ச்சி தங்கிய தமிழ் மொழியே” என தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் க. நமச்சிவாயர்.

மோனை நயம்:
‘மோனையற்ற பாட்டு
சேனையற்ற நாடு’
செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை.
ஒண்டமிழ், ஒளிர்தமிழ், ஒளிர்வுறும்,
தனித்தமிழ், தண்டமிழ் ஆகிய மோனைச் சொற்கள் பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது.
எதுகை நயம்:
வீரத்துக்கு அழகு வேங்கை
செய்யுளுக்கு அழகு எதுகை’
செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடை.
தேனினும், ஊனினும், வானினும் ஆகிய எதுகைச் சொற்கள் பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது.
இயைபு நயம்:

‘பாடலின் இயைபு
படிப்போர்க்கு வியப்பு’
செய்யுளில் கடைசி எழுத்தோ சீரோ அசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும். ‘மொழியே’ என்னும் சொல் அடிதோறும் வந்து இயைபாக அமைந்துள்ளது. அடிதோறும் மூன்றாம் சீரில் செந்தமிழ், ஒண்டமிழ், ஒளிர்தமிழ், வண்டமிழ், தனித்தமிழ், தண்டமிழ் என்னும் சொற்கள் வந்து பாடலுக்கு இயைபாக அமைந்துள்ளன
அணி நயம்:

‘கோவிலுக்கு அழகு மணி
செய்யுளுக்கு அழகு அணி’
இப்பாடலில் ‘மொழி’ என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து சொற்பொருட் பின்வரு நிலையணியைக் கொண்டுள்ளது.

பாவகை : எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

44. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :
சுப்பையாவுடன் புஞ்சையில் அன்று அருகு எடுக்கும் வேலை. அன்னமய்யா வேலைக்கு ஒரு ஆளை அழைத்து வந்தார். அன்னமய்யாவுடன் வந்தது சன்யாசியோ, பரதேசியோ இல்லை. கிட்டே போய் பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன். வாலிபனது தாடியும், அழுக்கு ஆடையும், தள்ளாட்டமும் அவனை வயோதிபனைப் போலவும் சாமியாரைப் போலவும் காட்டியது.

நீச்சுத் தண்ணீர் :
அன்னமய்யாவைப் பார்த்த அவ்வாலிபன், குடிக்கத் தண்ணி கிடைக்குமா? எனக் கேட்டான். அதற்கு அன்னமய்யா நீச்சுத் தண்ணீ தரவா? எனக் கேட்டான். கரிசல் மண்ணில் பாதி புதைக்கப்பட்டு இருந்த கரிய மண் பாத்திரத்தின் வாய் கற்களால் மூடப்பட்டிருந்தது. அன்னமய்யா மண்பாத்திரத்தின் மேலிருந்த கல்லை அகற்றினான்.

ஜீவ ஊற்று :
அன்னமய்யா கலசத்திலிருந்து கஞ்சின் நீத்துப்பாகத்தைச் சிரட்டையில் ஊற்றிக் கொடுத்தான். நீத்துப் பாகமாகிய மேல் கஞ்சை வாலிபன் குடித்ததும் கலயத்தை அலசி தெளிவு மறைந்த சோற்றின் மகுளி கஞ்சையும் வாலிபனுக்கு ஊற்றிக் கொடுத்தான் அன்னமய்யா.வாலிபனுக்குள் ஜீவ ஊற்று பொங்கியது. அவன் உற்சாகம் அடைந்தான்.

அன்னமய்யாவின் மனநிறைவு :
கஞ்சியைக் குடித்த வாலிபன் வேப்ப மர நிழலைச் சொர்க்கமாய் நினைத்துத் தூங்கினான். இதைக்கண்ட அன்னமய்யாவுக்கும் மனநிறைவு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே அவ்வாலிபனையும் பார்த்தான்.

பெயர் பொருத்தம் :
தூக்கம் தெளிந்து எழுந்த வாலிபன் “உன் பெயர் என்ன?” என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அதற்கு அவன் அன்னமய்யா என்றான். எவ்வளவு பொருத்தம். ‘எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான்’ என் வாழ்வுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது என்று மனதுக்குள் கூறினான் அவ்வாலிபன்.

பரமேஸ்வரன் (மணி) :
அன்னமய்யா அந்த வாலிபனின் பெயரைக் கேட்டார். அவன் தன் பெயர் பரமேஸ்வரன் என்றும் தற்போதைய பெயர் மணி என்றும் சொன்னான். கம்மஞ்சோறும் துவையலும் கொடுத்தார்கள். பசியால் அதையும் உண்டு உறங்கினான்.

45. சான்றோர் வளர்த்த தமிழ் கட்டுரை எழுதுக.

ஞா. ஜோ. அந்தோனி பிரகாஷ்,
இளநிலை பட்டதாரி ஆசிரியர்,
மதுரை.